குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.12/2018

அ.சா. 2

2025–ம் ஆண்டு ஆகஸ்ட் 11–ம் தேதி திங்கள்கிழமை அரசு தரப்பு சாட்சி 02–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.மோகனபிரியா என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சேகர் | தொழில் | |
| தந்தை பெயர் | காவேரி | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 03.56 மணி,

Accused Saravanan Absent. Petition u/s.317 Cr.P.C fiiled and allowed. Advocate Mr.Ezhilarasu present for accused. APP Mr.M.Suresh present.

**முதல் விசாரணை :**

1. நான் ஆர்.சி.செட்டிப்பட்டியில் குடியிந்து, பெயிண்டிங் வேலை செய்து வருகிறேன். சுமார் 20 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் பகல் 03.00 மணியளவில் நானும், மாணிக்கம் என்பவரும் கருப்பூரில் டீ குடிப்பதற்காக வந்தோம். அப்போது போலிசார் வந்து, யாரையோ விசாரணை செய்தார். நாங்கள் இருவரும் அருகில் இருந்தோம்.

2. அருகிலிருந்து நபர்களையும் போலிசார் விசாரித்துவிட்டு எங்களிடம் சாட்சி கையெழுத்து கேட்டார்கள். நாங்கள் சாட்சி கையெழுத்து போட்டோம். தற்போது என்னிடம் காட்டப்படும் எதிரி சரவணன் என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது சாட்சி கையெழுத்து மற்றும் 08.03.2005 தேதியிட்ட கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1வது சாட்சி கையெழுத்து ஆகியவை என்னுடையது. ( **எதிரி சரவணன் என்பரின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது கையெழுத்து அ.சா.ஆ.3 ஆகவும், 08.03.2005 தேதியிட்ட கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1வது கையெழுத்து அ.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**.)

S SHARMILA
Digitally signed by S SHARMILA
Date: 2025.08.11 17:54:52 +0530

3. போலிசார் அந்த இடத்தில் யாரை விசாரித்தார்கள் என்று எனக்கு தெரியாது. போலிசார் பொருட்களை எதுவும் கைப்பற்றினார்களா என்று எனக்கு தெரியாது.

**(அரசு தரப்பு சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்க கேட்டதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)**

4. போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், அந்த விசாரணையில் கடந்த 08.03.2005 ஆம் தேதி மாலை 03.00 மணியளவில் கருப்பூர் பேருந்து நிறுத்தத்தில் வைத்து எதிரி சரவணன் என்பவர் தாமாக முன்வந்து அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை போலிசார் பதிவு செய்தபோது நான் சாட்சியாக உடனிருந்து சாட்சி கையெழுத்து போட்டுவிட்டு, அதைத்தொடர்ந்து மேற்படி எதிரியிடமிருந்து 15.45 மணியவில் ஒனிடா கலர் டி.வி. ஒன்று, ரிலையன்ஸ் செல்போன் ஒன்று ஆகியவற்றை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றியபோது சாட்சியாக உடனிருந்து சாட்சி கையெழுத்து போட்டுவிட்டு தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை : இல்லை.**

**மறுவிசாரணை : இல்லை**

**விசாரணை முடிந்த நேரம் : மதியம் 04.04 மணி.**

S SHARMILA

Digitally signed by S SHARMILA
Date: 2025.08.11 17:54:56 +0530